


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | மே 19, 2022 | புரட்சி 21 | முழக்கம் 18 | விலை: ரூ.3.00

## பள்ளிப்பாளையத்தில் மண்டல மாநாடு எழுச்சி

# ஆரியத்துக்கு எதிராக உருவானதே திராவிடம்








***ஈரோடு மண்டல மாநாடு – பள்ளிப்பாளையத்தில் எழுச்சியுடன் நடந்தது. நமக்கான அடையாளம் 'திராவிட மாடல்' என்ற கோட்பாட்டை விளக்கி 33 தெருமுனைக் கூட்டங்களைத் தொடர்ந்து மண்டல மாநாடு நடைபெற்றது.***

*திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக, ஈரோடு, நாமக்கல், கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய ஈரோடு மண்டல மாநாட்டின் நோக்கங்களை விளக்கி, ஈரோடு வடக்கு மாவட்டம் சார்பாக 8 இடங்களில் தெருமுனைக் கூட்டங்களும், ஈரோடு தெற்கு மாவட்டம் சார்பாக 25 இடங்களில் தெருமுனைக் கூட்டங்களும், நாமக்கல் மாவட்டம் சார்பாக 10 இடங்களில் தெருமுனைக் கூட்டங்களும் நடைபெற்று முடிந்திருந்தன. தெருமுனைக் கூட்டங்களில், மாவட்ட இயக்க முன்னோடிகளும் ,திரளான தோழர்களும், தோழமை அமைப்புகளின் பொறுப்பாளர்களும் பங்கேற்றனர்.*

***பள்ளிபாளையத்தில் மண்டல மாநாடு :*** *ஈரோடு, நாமக்கல், கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய ஈரோடு மண்டல மாநாடு 09.05.22 திங்கள் மாலை 5 மணிக்கு, நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நேரு திடலில் தொடங்கியது. மாநாட்டையொட்டி பள்ளிபாளையம் நகர் முழுவதும் சுவரொட்டிகளும் ,பிளக்ஸ் பேனர்களும் வைக்கப்பட்டிருந்தன. மாநாடு நடைபெறும் இடத்தின் அருகே கொடிக்கம்பங்கள் கட்டப்பட்டு, அனைத்திலும் நீதிக்கட்சி மற்றும் சுயமரியாதை இயக்கத் தலைவர்களின் படங்கள் மற்றும் பொன்மொழிகள் வைக்கப்பட்டிருந்தன.*

*மாநாட்டிற்கு நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி தலைமை வகித்தார். ஈரோடு மாவட்டத் தலைவர் சென்னிமலை செல்வராசு மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பெரியார் பிஞ்சுகள் மதிவதினி,பூபதி ஆகியோரின் சிலம்பாட்டம் நடைபெற்றது.*

***ஆர்.எஸ். பாரதி:*** *கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்ட இந்த மாநாட்டில், சிறப்பு அழைப்பாளராக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமாகிய ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டார். மாநாட்டில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தின சாமி, வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், திருச்செங்கோடு தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.மூர்த்தி, பள்ளி பாளையம் நகரச் செயலாளர் ரவி, பள்ளிபாளையம் நகர்மன்றத் தலைவர் செல்வராஜ், துணைத் தலைவர் பாலமுருகன், திராவிட முன்னேற்றக் கழக ஈரோடு மாவட்ட இலக்கியஅணி அமைப்பாளர் சிவகிரி இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*ஆர்.எஸ் பாரதி பேசும் போது,"திராவிடம் என்று சொன்னால் ஆரியத்திற்கு எதிரானது. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் பார்ப்பனியத்திற்கு எதிரானது. அன்றைக்கெல்லாம் நீதிமன்றங்களில் வழக்கறிஞராக பெரும்பாலும் பார்ப்பனர்கள் தலையில் டர்பன் கட்டிக் கொண்டு வருவார்கள். ஆனால், இன்றைக்கு அனைத்து சமூகத்தவர்களும் வழக்கறிஞர்களாக உள்ளனர். இதற்கெல்லாம் காரணம் திராவிட இயக்கம்.*

*அ.தி.மு.க எங்களுக்கு பங்காளிகள். ஆனால், பி.ஜே.பி நமக்கு பகையாளி, எதிரி. நம் ஊரில் நாம் நமக்கு பிடித்தமான உணவைச் சாப்பிடுகிறோம். மாட்டுக்கறி சாப்பிடுகிறோம். ஆனால், வட மாநிலங்களில் பசுமாட்டின் மீது கையை வைத்தாலே அடிக்கிறார்கள். டெல்லியில் நாடாளுமன்றத்தில் குரங்குத் தொல்லை அதிகம். ஆனால், அவற்றை எதுவும் செய்ய முடியாது. அவற்றின் மீது கை வைத்தால், அவை அனுமார் என்று சொல்லி காவிக்காரன் வரிசை கட்டி வருவான். மத்திய அரசு மீண்டும் நம்மீது இந்தியைத் திணிக்கப் பார்க்கிறது. அது போன்ற நிலை வரும்போது மீண்டும் 1938இல், 1965இல் தமிழகத்தில் ஏற்பட்ட நிலை ஏற்படும் என்பதை ஒன்றிய அரசுக்கு எச்சரிக்க விரும்புகிறோம். இன்று பாராளுமன்றத்திலேயே ஆந்திரா, கேரளா, கர்நாடகத்தை சார்ந்த எம்.பி.க்கள் இந்தி வேண்டாம் என்று பேசுகிறார்கள்.*

*நான் கல்லூரியில் படிக்கும் காலத்தில் வகுப்பில் பெரும்பாலான மாணவர்கள் பார்ப்பனர்களாகவும், ஒரு சில மாணவர்களே பார்ப்பனர் அல்லாதவர்களாக இருப்போம். ஆனால், இன்றைக்கு இந்த நிலை மாறியுள்ளது. அன்றைக்கு கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் பட்டமளிப்பு வாங்கியவுடன் அதை புகைப்படம் எடுத்து வீட்டில் மாட்டிக் கொள்வோம். ஏனென்றால், அக்காலத்தில் கல்லூரிப்படிப்பு படிப்பவர்கள் எண்ணிக்கை குறைவு. ஆனால், இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சி காரணமாக லட்சக்கணக்கானோர் கல்லூரிப் படிப்பை முடிக்கின்ற காரணத்தால், அதுபோன்று அதிசயமாக புகைப்படம் எடுப்பதில்லை" என்று கூறினார்.*

*வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் பேசும்போது, புராண, இதிகாசங்களால் நாம் எவ்வாறு ஏமாற்றப் படுகிறோம் என்பதை விளக்கிப் பேசினார். அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி பேசும் போது இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சியில் நமக்கு என்னவெல்லாம் கிடைத்திருக்கிறது என்று பட்டியலிட்டுப் பேசினார்.*

*திமுக இலக்கிய அணி அமைப்பாளர் சிவகிரி இளஞ்செழியன் பேசும் போது, சுதேசி மாடல் வேண்டும் என்று சொல்லும் பிரதமர் மோடி பயன்படுத்தும் அனைத்துப் பொருட்களுமே வெளிநாட்டு விலையுயர்ந்த பொருட்கள் தான் என்று சுட்டிக்காட்டினார். முன்னதாக நாமக்கல் மாவட்டத் தி.வி.க. தலைவர் மு.சாமிநாதன் உரையாற்றினார்.*

*இறுதியாக, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஏறத்தாழ இரண்டு மணி நேரங்கள், நீதிக்கட்சி குறித்தும், பார்ப்பனியம் குறித்தும், திராவிட இயக்க வரலாறு குறித்தும் நீண்ட விளக்கத்தை அளித்தார். இரவு 10 மணி வரை கூட்டம் சிறிதும் கலையாமல் அனைவரும் ஆர்வமுடன் அமர்ந்திருந்து கருத்துகளைக் கேட்டனர். ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் வேணுகோபால் நன்றி கூறினார்.*

*கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும், பொது மக்களுக்கும் சுவையான மாட்டுக்கறி பிரியாணி வழங்கப்பட்டது. தோழர்கள் மீனாட்சி, நாகராஜ், பிரகாஷ், தம்பிதுரை ஆகியோர் உணவு பரிமாறினர்.*

## 28 தெருமுனைக் கூட்டங்கள்; கோவையில் மண்டல மாநாடு : 'திராவிட மாடலின்' சமூகநீதி – சுயமரியாதை கொள்கைகளுக்கு மக்கள் பேராதரவு









*திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் "நமக்கான அடையாளம் - திராவிட மாடல்" எனும் முழக்கத்தோடு கோவை டாடாபாத் ஆறுமுக்கு சாலையில் 11.5.2022 புதன் மாலை 5 மணிக்கு தொடங்கி நடைபெற்றது.*

*முன்னதாக 23.04.2022 அன்று கோவை மேட்டுப் பாளையத்தில் துவங்கி கோவை திருப்பூர் உடுமலை பொள்ளாச்சி என பல்வேறு பகுதிகளில் 07.05.2022 வரை 28 தெருமுனைக் கூட்டங்கள் நடத்தி மக்களை சந்தித்து நமக்கான அடையாளம் திராவிட மாடல் எனும் பரப்புரையை கோவை திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தியது. நிறைவாக மண்டல மாநாடு நடைபெற்றது.*

*மாநாட்டின் துவக்க நிகழ்வாக திராவிட மாடல்*

*(4ஆம் பக்கம்)*

# ‘ஆன்மீகத்தில்’ பதுங்குகிறது பார்ப்பனியம்

ஆன்மீகம் என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்பதே நமக்குப் புரியவில்லை.

அகராதியில் இதற்கு எந்த அர்த்தமும் இருப்பதாகத் தெரிய வில்லை. ஆன்மீகம் என்பது ஒருகாலத்தில் எப்படி பார்க்கப் பட்டது? சனாதன வேதமதவாதிகள் ஒரு மதத்தைக் கட்டமைத்து, அதில் பார்ப்பனிய மேலாண்மையை உயர்த்திப் பிடித்து அதற்கான சடங்குகள், வழிபாட்டு முறைகளை உருவாக்கினார்கள். அப்படி கட்டமைக்கப்பட்ட ஒரு மதத்தை உருவாக்கியபோது, அதிலிருந்து விலகி நின்றவர்கள் ’ஆன்மீகவாதிகள்’ என்று கருதப்பட்டார்கள். இராமகிருஷ்ணர், விவேகானந்தர், வள்ளலார், அரவிந்தர், ஜே.கிருஷ்ணமூர்த்தி, இப்படி ஏராளமான பட்டியல்கள் உண்டு. இவர்கள், கட்டமைக்கப்பட்ட சனாதன மதத்தின் கருத்துக்களை அப்படியே ஏற்காமல், அதில் பல கருத்துகளிலிருந்து மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்தனர்.

பிறகு ஆன்மீகம் என்பது சில கார்ப்பரேட் சாமியார்களின் கைகளுக்கு வந்தது. யோகா, தியானம், என்றெல்லாம் சொல்லிக் கொண்டு, உலகம் முழுவதும் கிளைகளை அமைத்துக் கொண்டு, அதற்கு காப்புரிமை பெற்றுக் கொண்டு, அதோடு பன்னாட்டு வணிகத்தையும் செய்து கொண்டு கோடிக் கணக்கில் வணிகமாக, தொழிலாக நடத்தினர். ‘ஆன்மீகம்’ அடுத்த கட்ட சீரழிவை நோக்கி சென்றது.

இப்போது வைதீகம், வர்ணாஸ்ரம தர்மத்தை வெளிப்படையாகப் பேசினால் மக்கள் விழித்துக்கொண்டு ஏற்க மாட்டார்கள் என்று பார்ப்பனியம் நயவஞ்சகமாக ‘ஆன்மீகம்’ என்ற சொல்லை கையில் எடுக்கத் தொடங்கியிருக்கிறது. திருவாரூரில் தியாகராஜ சுவாமிகள் தேரை ஓட வைத்தது கலைஞர் தான். அந்தக் கோவில் தேர் ஆண்டுக்கு ஒரு முறை ஓடும் மேல வீதிக்கு திருவாரூர் நகர சபை ’கலைஞர்’ பெயரை சூட்டியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இது ஆன்மீகத்திற்கு எதிரானது மனுநீதி சோழன் பெயரை சூட்டுங்கள் என்று சொல்லிக் கொண்டு பாரதிய ஜனதா கட்சி ஒரு கண்டன ஆர்ப்பாட்டத்தை திருவாரூரில் நடத்தியிருக்கிறது. இதற்கும் ஆன்மீகத்திற்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? கலைஞர் என்ற சூத்திரர் பெயர் வைக்கப்பட்டத் தெருவில் தியாகராஜன் பவனி வந்தால் தீட்டாகிவிடுவாரா? இந்தத் தீட்டுக்குப் பெயர் தான் ஆன்மீகமா? இந்த ஆன்மீகத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டா? இந்த ஆன்மீகம் ஜாதியத்தை எதிர்க்கிறதா? ஆதரிக்கிறதா? இந்த ஆன்மீகம் சமூக சுரண்டலை ஆதரிக்கிறதா? எதிர்க்கிறதா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இவர்களிடம் பதில்கள் இல்லை.

பாரதிய ஜனதா கட்சி பேசுகிற ஆன்மீகம் என்பது, திராவிட முன்னேற்றக் கழக எதிர்ப்பு - என்றாகிவிட்டது. அடுத்து மோடிக்கு ’ஜே’ போட வேண்டும். தமிழ்நாடு, பாஜக தலைவர் அண்ணாமலையைத் தலைவராக ஏற்றுக் கொள்ள வேண்டும். சட்டம் ஒழுங்குகளை மீறுகிறவர்களாக இருக்க வேண்டும். கட்டப்பஞ்சாயத்து நடத்தலாம், கஞ்சா கடத்தலாம், சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு காவலிலும் இருக்கலாம்.

ஆன்மீகம் என்பது விவேகானந்தர் போன்றோரிடம் தொடங்கி, இன்றைக்கு அண்ணாமலையிடம் வந்து நிற்கிறது. இவர்கள் அனைவருமே ஆன்மீகக் காப்பாளர்கள்தான். பா.ஜ.க.வில் இருந்தாலே போதும், ஆன்மிகவாதி தான். தி.மு.க.வை அதரித்தால் ஆன்மிக எதிர்ப்பாளர்கள்.

ஒரு உண்மையான ஆன்மிக வாதி, தன்னைக் கடந்து நிற்பவன் என்கிறார்கள். ஆனால், தன்னைப் பல்லக்கில் வைத்து மனிதர்களை சுமக்கச் சொல்லும் ஆதினங்கள் ஆன்மிக வாதிகளா?

# ஆவிகளை நம்புகிறார் உச்சநீதிமன்ற நீதிபதி

**எட்வின் பிரபாகரன்**

**உச்ச நீதிமன்ற நீதிபதி இராம சுப்ரமணியத்தின் போலி அறிவியல் வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு (8)**

‘நிமிர்வோம்’ மாத இதழில் 2020 ஆம் ஆண்டில் வெளி வந்துள்ள கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி மீண்டும் வெளியிடுகிறோம்.

**புதிர் 13:** 1972ஆம் ஆண்டு ஜார்ஜ் ஓவென் என்ற கணித மரபியலாளர் ஆவிகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்ள எண்ணினார். அதற்காக ஒரு குழு உருவாக்கப்பட்டது. அக்குழுவில், ஜார்ஜ் ஓவென், அவருடைய துணைவி அய்ரிஸ் மற்றும் பலர் இடம்பெற்றிருந்தனர். குழுவின் செயல்பாடுகளை மேற்பார்வையிடும் பொறுப்பை உளவியலாளர் ஜோயெல் விட்டொன் ஏற்றார். 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த பிலிப் என்ற நபரின் ஆவியை தொடர்புகொள்ள முயன்றதால், இது “பிலிப் பரிசோதனை” என்று அழைக்கப்பட்டது. இந்த பரிசோதனையின்போது, திடீரென்று அறையின் விளக்குகள் மங்கலாகிப் போகும். குழு உறுப்பினர்கள் பிலிப்பின் ஆவியை கேட்டுக்கொண்டதும், விளக்குகள் பிரகாசமாக எரியும். ஒருநாள் திடீரென்று, குழு உறுப்பினர்கள் அமர்ந்திருந்த மேசையின் மீது ஒரு புகைப்படலம் உருவாகி, மேசை அறைக்கதவை நோக்கி நகரத் தொடங்கியது. ஓவென் குழு, அறிவியலைத் தாண்டி நடந்த நிகழ்வுகளால் ஆடிப்போனது.

**விடை:** அய்ரிஸ்சும், மார்கரெட் ஸ்பரொவும் இணைந்து ஓவென் குழுவினரின் ஆய்வு முடிவுகளை “Conjuring Up Philip (1976)” என்று நூலாக வெளியிட்டனர். அந்நூலில் குழுவினர் பேயோடு நடத்திய உரையாடல் என்று சில உரையாடல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை படித்த கனடா எழுத்தாளர் ஜான் ராபர்ட் கொலொம்போ, தனது “Ghost stories of Ontario (1995)” நூலில், “பிலிப்பிடம் கேள்வி கேட்ட குழுவினர், என்னென்ன பதில்களை எதிர்பார்த்தார்களோ, அந்தந்த பதில்களை பிலிப் அளித்ததைப் போல செயற்கையாக உரையாடலை அமைத்துள்ளனர்” என்று மேற்கோள் காட்டியுள்ளார். மேலும் இந்த குழுவினர் செய்த ஆய்வுமுறை அறிவியலுக்கு எதிரான பித்தலாட்டமாக இருந்துள்ளது. குழுவினரின் ஆய்வை மேற்பார்வையிட்ட உளவியலாளரான ஜோயல் விட்டொன் மோசடி வழக்கில் 2017ஆம் ஆண்டு ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளார். சில வழக்கு விசாரணைகளில், 6 நிகழ்வுகளில் தன்னுடைய கல்வித் தகுதி குறித்து தவறான தகவலை அளித்ததால், ஒன்டரியோ மருத்துவர்கள் & அறுவை சிகிச்சை நிபுணர்கள் கல்லூரி, அவருடைய மருத்துவ உரிமத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. விட்டொன் 1998இல் பொய் சாட்சியம் அளித்ததாக குற்றம் சாட்டப்பவர். இந்த தக்வல்கள் The Globe and Mail என்ற கனடா நாட்டு பத்திரிக்கையில் பதிவாகியுள்ளது. இத்தகைய ஒரு நேர்மை தவறிய ஒரு மனநல மருத்துவரின் மேற்பார்வையில் நடைபெற்ற ஓவென் குழுவினரின் ஆய்வை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

**புதிர் 14:** 1932ஆம் ஆண்டு, மருத்துவர் மன்றோவின் மருத்துவமனைக்கு 32 வயது மதிக்கத்தக்க மேரி நைட் வந்தார். 9 மாத கருவை தன் வயிற்றில் சுமந்து கொண்டிருப்பதாகவும், குழந்தை உதைப்பதை தன்னால் உணர முடிகிறது என்றும், பிரசவத்துக்கான நேரம் நெருங்கிவிட்டதாகவும் கூறினார். மேரி நைட்டின் பால் சுரப்பிகள் உட்பட உடலின் எல்லா பாகங்களிலும் கருத்தரித்து இருப்பதற்கான அடையாளங்கள் காணப்பட்டன. ஆனால், ஸ்டெதெஸ்கோப்பை வைத்து சோதித்து பார்த்ததில், குழந்தையின் இதயத்துடிப்பை உணர முடியவில்லை. வயிற்றுக்குள் இன்னொரு உயிர் இருப்பதற்கான அறிகுறியே இல்லை. எனவே, கர்ப்பம் வெறும் கற்பனையில் உருவானதை மன்றோ அறிந்துகொண்டார். விஞ்ஞானிகளை குழப்பும் இன்னொரு விஷயம் என்னவென்றால், சில சமயங்களில் ஆண்களுக்கும், ஏன் விலங்குகளுக்கும் கற்பனைக் கரு தோன்றுவது எப்படி என்பதேயாகும்.

**விடை:** போலியாக கருவுருவது பெரும்பாலும் ஒரு உளவியல் சிக்கலாகவே உள்ளது. இது அகச்சுரப்பி தொகுதியில் ஏற்படும் மாற்றங்களால் நிகழ்கின்றது. இதனால் சுரக்கும் இயக்குநீர் (harmone), பிரசவத்தின்போது ஏற்படும் உடல் மாற்றங்களை, பிரசவம் ஏற்படாதபோதே உருவாக்குகிறது. ஒரு பெண் உண்மையாகவே கருவுற்று இருக்கும்போது, கணவனுக்கும் இத்தகைய போலி கருவுருதல் உணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது Couvade Syndrome என்று அழைக்கப்படுகிறது. இதுவும் தவறான இயக்குநீர் சுரப்பிகள் சுரப்பதால் ஏற்படும் விளைவாகும். பிரசவ காலத்தில், துணைவி படும் துயரத்தை எண்ணி கூட, சில ஆண்களுக்கு இவ்வாறாக நடக்கலாம் என்பதால், இது “பரிதாப கருவுறுதல்” என்றும் அழைக்கப்படுகிறது. அமெரிக்க அய்க்கிய நாடுகளில், 1940களில் 0.4% கருவுறுதல்கள் போலியானதாக இருந்துள்ளன. ஆனால், மருத்துவ அறிவியலின் வளர்ச்சியால், 2013இல் இந்த எண்ணிக்கை 0.0045% என்ற அளவில் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(கட்டுரையாளர் கழக செயல்பாட்டாளர்)

(தொடரும்)

# குடந்தையில் கொளத்தூர் மணி பேட்டி: தமிழக ஆளுநரை திரும்பப் பெற வேண்டும்!

குடந்தையில் நடைபெற்ற கழக மண்டல மாநாட்டுக்கு வருகைப் புரிந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

“ஆளுநர் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல. குடியரசுத் தலைவர் கூட நாடாளுமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆளுநர் என்பவர் ஒன்றிய அரசால் நியமிக்கப்படுகிற ஒரு அரசு ஊழியர் என்பது தான் இவரது தகுதி நிலை ஆகும். ஆளுநர் தன்னிச்சையாக எதிலும் செயல்பட முடியாது. அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பது தான் அரசியலமைப்பு அவருக்கு விதித்திருக்கிற கடமை ஆகும். ஆளுநர் உரை என்பது கூட அமைச்சரவை எழுதிக் கொடுப்பதை படிப்பது தானே தவிர ஆளுநர் தனது கருத்தை சொல்வதற்கு உரிமை இல்லை. ஆனால், அண்மைக் காலங்களில் தமிழ்நாடு ஆளுநர், ஒரு மசோதாவை சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பினால், அரசியலமைப்புச் சட்டத்தில், மசோதாவிற்கு ஒப்புதல் வழங்க காலவரையறை இல்லை என்பதை மட்டும் வைத்துக் கொண்டு, இதுவரை தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட பல மசோதாக்களைக் கூட முடக்கிப் போட்டிருக்கிறார்.

தெலுங்கானாவில் உள்ள அரசுக்கும் ஆளுநருக்கும் பல முரண்பாடுகள் இருந்தாலும், தெலுங்கானாவின் ஆளுநர் ஒரு மசோதாவைக் கூட நிறுத்தி வைக்கவில்லை. இது அந்த ஆளுநரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஆனால் தமிழ்நாட்டு ஆளுநர், தமிழ் வழியில் தேர்ச்சிப் பெற்றவர்கள் தான் தமிழ்நாடு அரசுப் பணியில் வர முடியும் என்று தமிழ் மக்களுக்காக நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு கூட ஒப்புதல் அளிக்கவில்லை. இதில் அவருக்கு என்ன சிக்கல் ?

எழுவர் விடுதலையைப் பொறுத்தவரை, பேரறிவாளன் தொடுத்த வழக்கில் ஏற்கெனவே இருந்த இரஞ்சன் கோகாய் தலைமையில் இருந்த ஆயம், மாநில அரசு 161 விதியின் கீழ் விடுதலை செய்யலாம் என்று கூறியிருக்கிறது. அதற்கான பரிந்துரையினை மாநில அரசு கொடுத்தும், அதை குடியரசுத் தலைவருக்கு அனுப்புவது என்று காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறார் ஆளுநர். இந்த விடயத்தில் தொடர்ச்சியாக உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பிக் கொண்டே இருக்கிறது. "ஏன் தாமதமாகிறது ? நாங்களாகவே (உச்சநீதிமன்றம்) விடுவிக்கப்பட வேண்டிய சூழல் வந்துவிடும்." என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

எனவே அவரின் செயல் அப்பட்டமான அரசியலமைப்புச் சட்ட விதிமீறல் ஆகும். நாம் கல்விக் கொள்கையில் இருமொழிக் கொள்கை கொண்டிருப்பவர்கள். ஆனால் இவர் செல்லும் இடங்களிலெல்லாம் மும்மொழிக் கொள்கையைப் பற்றி பேசுகிறார் ; இராமராஜ்ஜியத்தைப் பற்றி பேசுகிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக, முரணான கருத்துக்களை தொடர்ந்து பேசி வருவதன் வழியாக, நமக்கு எதிரான ஒருவராக, தமிழ்நாடு மக்களின் நலனுக்கு எதிரான ஒருவராகத் தான் ஆளுநரை புரிந்து கொள்கிறோம். இப்படிப்பட்ட ஆளுநரை ஒன்றிய அரசு திரும்பப் பெறுவது என்பது அவரின் மரியாதையைக் காப்பாற்றியதாக இருக்கும். அது, தமிழர்அனைவருக்கும் நலமாகவும் அமையும்” என கொளத்தூர் மணி தெரிவித்தார்.

# திராவிட மாடல் காலத்தின் தேவைக்கேற்ற நவீனத்துவக் கோட்பாடு

*தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத் துறை வெளியிட்ட ஓராண்டு ஆட்சி சாதனை மலரில் எழுதிய கட்டுரை.*

**விடுதலை இராசேந்திரன்**

நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென், ஒரு கதையை கூறினார். அது சமூக நீதித் தொடர்பானது. “ஒரு புல்லாங்குழல் தரையில் கிடக்கிறது, அதற்கு மூன்று சிறுவர்கள் உரிமை கோருகிறார்கள். ஒரு குழந்தை, இந்தப் புல்லாங்குழலை எனக்கு மட்டுமே வாசிக்கத் தெரியும், எனக்குத் தருவது தான் சரி என்று கேட்கிறது. மற்றொரு குழந்தை, என்னிடம் விளையாடுவதற்கு எந்தப் பொருளும் கிடையாது. வாங்கித் தரும் நிலையில் எனது பெற்றோர்களும் இல்லை. எனக்குத் தாருங்கள் என்று கேட்கிறது. மூன்றாவது குழந்தை, இந்தப் புல்லாங்குழலை நானே எனது உழைப்பில் உருவாக்கி தவற விட்டுவிட்டேன், எனக்குத் தான் தர வேண்டும் என்று கேட்கிறது. இந்த மூன்று குழந்தைகளும் தங்களுக்கான நீதியை பேசுகின்றன. மூன்றிலும் நியாயம் இருக்கிறது. ஆனால், இதை யாருக்கு வழங்குவது என்பதை எப்படி முடிவெடுப்பது?” என்ற கேள்வியோடு அமர்த்தியா சென் முடித்துக் கொள்கிறார். திராவிடர் இயக்கம் இதை எப்படித் தீர்மானிக்கும்?

மூன்று குழந்தைகளின் சமூகப் பின்னணியை ஆராயும், காலம் காலமாக புல்லாங்குழலை வாசிக்கத் தெரிந்த குழந்தையைவிட அதை வாசிக்கத் தடை போட்டிருந்த சமூகப் பின்னணியில் எந்த குழந்தை வந்தது? அந்தக் குழந்தைக்கே முன்னுரிமை என்பதே திராவிடர் இயக்கத்தின் பார்வையாக இருக்கும்.

நீதி மறுக்கப்பட்ட சமூகங்கள், உலகம் முழுவதும் இருக்கின்றன. ஆனால், பிறப்பின் அடிப்படையில் ஜாதிய ஏற்றத்தாழ்வு கட்டமைப்போடு, நீதியை வழங்க மறுத்த சமூகம் இது. இதை எதிர்த்துப் பிறந்தது தான் “திராவிடர் இயக்கம்”. நீதிக் கட்சி தனது ஆட்சிக் காலத்தில், வகுப்புவாரி பிரதி நிதித்துவம், பெண்களுக்கு ஓட்டுரிமை, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இலவசக் கல்வி என்று தனது பயணத்தைத் தொடங்கியது. ஆனால், இந்தத் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ளும் வலிமை, பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு இருந்தால் மட்டுமே அதன் பயன்களை அவர்களால் எட்டிப் பிடிக்க முடியும், என்று சமூகநீதிப் பார்வை அடுத்தக் கட்டம் நோக்கி நகர்ந்தது. பகல் உணவு, சத்துணவு, இலவசக் கல்வி, இலவசச் சீருடை, இலவச பாடநூல், படிப்பு உதவித் தொகை என்று விளிம்பு நிலை சமூகத்தை வலிமைப் படுத்தும் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. வகுப்புவாரி பிரதிநிதித்துவம், நீதிமன்றத்தால் முடக்கப்பட்டபோது, வீதிமன்றத்தில் போராடி, முதன் முதலாகச் சட்டத்தை திருத்த வைத்தது பெரியாரும், அண்ணாவும். இன்று அனைத்து மாநிலங்களும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டு உரிமைகளைப் பெரும் வாய்ப்புக் கதவுகளை திறந்து விட்டது திராவிடர் இயக்கம்.

நாடாளுமன்றத்தில் சட்டம் வருவதற்கு முன்பே, தமிழ்நாட்டில் பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர். இட ஒதுக்கீடுகளை மேலும் ஜனநாயகப்படுத்த, உள் ஒதுக்கீடுகளைக் கொண்டு வந்ததும் திராவிடர் இயக்கம் தான். தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் முதலமைச்சரான பிறகு, சமூகநீதியில் முப்பெரும் சாதனைகளை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார். சட்டப் போராட்டம் நடத்தி, மருத்துவக் கல்லூரிக்கான அகில இந்திய கோட்டாவில், 27% பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல அனைத்து மாநிலங்களுக்கும் பெற்றுத் தந்துள்ளார். இது முதல் சாதனை.

மருத்துவ உயர் பட்டப் படிப்பில் (Super speciality) 50% இட ஒதுக்கீட்டை மீட்டெடுத்தது இரண்டாவது சாதனை. நீட் தேர்வில் பாதிக்கப்பட்ட அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு சட்டம், அ.இ.அதிமுக ஆட்சியில் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வழக்கம் போல் ஆளுநர் கிடப்பில் போட்டார். எதிர்க்கட்சித் தலைவரான மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆளுநர் மாளிகையை நோக்கிய மிகப்பெரிய போராட்டம் நடந்த பின்னர் தான் ஆளுநரின் ஒப்புதல் கிடைத்தது. அதிமுக ஆட்சியில் மருத்துவப் படிப்பில் மட்டுமே கொண்டுவரப்பட்ட இந்த இட ஒதுக்கீட்டை, திமுக




இது பண்டைக்கால மன்னராட்சியின் பழைமைவாதக் கோட்பாடு அல்ல. சமகால மானுட விழுமியங்களை உள்ளடக்கிய நவீனத்துவ சிந்தனை.

ஆட்சிக்கு வந்தப் பிறகு பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் ஆகிய தொழிற் படிப்புகளுக்கும் விரிவாக்கியது. இது குறித்து ஆராய, முன்னாள் நீதிபதி முருகேசன் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. அரசுப் பள்ளி மாணவர்கள் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றும், மருத்துவக் கல்லூரியில் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட தரவுகள் திரட்டப் பட்டன. நீதிபதி முருகேசன் குழுவின் பரிந்துரையை ஏற்று, தமிழ்நாடு அரசு, சட்டமன்றத்தில் தனிச் சட்டம் கொண்டு வந்தது, நீதிமன்றத்தில் இதை எதிர்த்து வழக்கு வந்த போது, சட்ட நிபுணர்களைக் கொண்டு வாதாடி வெற்றி பெற்று, மூன்றாவது சாதனையை நிகழ்த்தியிருக்கிறது.

7.5% இட ஒதுக்கீடு மட்டுமல்லாமல் இந்த இட ஒதுக்கீட்டின் கீழ் பயனடையும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், கலந்தாய்வு மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களை அரசே ஏற்கும் என்று ஆணைப் பிறப்பித்து அதற்கு உடனடியாக நிதி ஒதுக்கீடும் செய்தது. இப்போது, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும் மசோதாவை ஆளுநர் முடக்கிவைத்துள்ளதை எதிர்த்து தொடர்ச்சியான அழுத்தங்களைத் தந்து வருகிறது. சமூக நீதிக்கான கூட்டமைப்பு ஒன்றை நாடு தழுவிய அளவில் உருவாக்கிட 37 தலைவர்களுக்குக் கடிதங்களை எழுதியுள்ளார் தமிழ்நாடு முதல்வர்.

‘திராவிட மாடல்’ கோட்பாட்டை பிற மாநிலங் களுக்கும் கொண்டு செல்லும் முயற்சி என்று அவர் இதைக் கூறியுள்ளார். பெரியார் பிறந்தநாள், அம்பேத்கர் பிறந்தநாள் முறையே சமூக நீதி நாளாக, சமத்துவ நாளாக அரசு அறிவித்து சமூக நீதி, ஜாதி எதிர்ப்பு உறுதிமொழிகளை அரசு அலுவலகங்களில் எடுக்கச் செய்திருக்கிறார் முதலமைச்சர்.

இட ஒதுக்கீடுகள் முறையாகப் பின்பற்றப்படு கிறதா என்பதைக் கண்காணிக்க குழு அமைக்கப் பட்டுள்ளது. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை வலிமைப் படுத்திட பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப் படும் இழப்பீட்டுத் தொகை அதிகரிக்கப்பட் டுள்ளது. சமூக நீதி என்ற கோட்பாடு, இட ஒதுக்கீடு என்றத் திட்டத்தோடு நிறைவடைந்துவிடாமல், அதன் உள்ளடக்கம், மேலும் விரிவாக்கப்பட்டு வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். பெண்கள் சமத்துவம், தமிழ் வளர்ச்சி, சமத்துவப் பண்பாடு, தொழில் கட்டமைப்பு வளர்ச்சி, மாநில சுயாட்சி என்று அதன் எல்லையை தமிழ்நாடு முதல்வர் விரிவாக்கி வருகிறார்.

சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டது தான் திராவிட மாடல். இது பண்டைக்கால மன்னராட்சியின் பழைமைவாதக் கோட்பாடு அல்ல. சமகால மானுட விழுமியங்களை உள்ளடக்கிய நவீனத்துவ சிந்தனை.

மருத்துவக் கல்லூரியில் அகில இந்திய கோட்டாவில் 27% இட ஒதுக்கீடு தொடர்பான வழக்கில் அதை நியாயப்படுத்தி உச்சிநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். சமூக நீதிக்கு நவீன சொல்லாடல்களை அத்தீர்ப்பு வழங்கி இருக்கிறது. திராவிட மாடலுக்கு வலிமை சேர்க்கின்ற தீர்ப்பு என்றே இதை சொல்ல வேண்டும். உதாரணத்திற்கு சிலவற்றைச் சுட்டிக் காட்டுவோம்.

**1) சமூகப் பன்மைத்துவம் (Social Diversity)**

சமூகப் பன்மைத்துவம் சமூகப் பாகுபாடுகளுக்கு (Social Discrimination) முற்றிலும் எதிரானது. பாகுபாடுகளைத் தகர்த்து, சம தளத்தில் மானுடத்தை நிறுத்தச் செய்வது. ஒற்றைப் பண்பாடு, ஒற்றை மதம், ஒற்றை உணவு முறை என்ற பாசிச சிந்தனைகளை மறுப்பது.

**2) கட்டமைப்புத் தடைகள் (Structural Barriers )**

ஜாதியக் கட்டமைப்பு, சமூகப் பின்னணி, வறுமைச் சூழல் ஆகிய பின்னணி கொண்ட சமூகத்தை, கல்வி, சுயமரியாதை உரிமைகளைத் தடுத்து காலம் காலமாக தடுக்கப்பட்டு வந்த அநீதிகளைத் தகர்ப்பதே இந்தக் கட்டமைப்புத் தடை. சமூக கட்டமைப்புத் தடைகளை நியாயப் படுத்தினார்கள். அவர்கள் தங்களுக்கான சொல்லாடல்களாக, தகுதி, திறமை, மதிப்பெண், நிர்வாகத்திறன் என்று பேசினார்கள். இந்த எதிர்ச் சொல்லாடல்கள் அனைத்தும் நேர்மையற்றவை என்று உச்சநீதிமன்றம் தெளிவு படுத்தியிருக்கிறது.

**3) கலாச்சார மூலதனம் (Cultural Capital)**

இது இந்தியாவின் ஜாதிய சமூகத்திற்கு மட்டுமே உள்ள தனித்துவமான சுரண்டல். பொருள் மூலதனம் இதற்குத் தேவையில்லை. உயர் குடிப் பிறப்பு மட்டுமே போதும். கலாச்சார மூலதனவாதிகள் சமூகத்தோடு உரிமைகளைப் பகிர்ந்து கொள்ள மறுத்தனர். பிறவியில் உயர்ந்தவர்களாக உரிமை கொண்டாடினார்கள். சமூக ஒடுக்குமுறைக்கு ஆன்மிகத்தை, பக்தியை, மதத்தை கருவிகளாக்கினர். உயர் ஜாதி சமூகப் பின்னணியில் இருந்து வந்த பிரிவுக்கு சமூகவியலாளர்கள் பயன்படுத்திய சொல் ‘சமூக மூலதனம்’ (Social capital) என்பதாகும். உச்சநீதிமன்றம், சமூக மூலதனம் என்ற சொல்லுக்கு மாற்றாக ‘கலாச்சார மூலதனம்’ என்று துல்லியமாக வரையறை செய்திருக்கிறது. ஜாதி ஆணவப் படுகொலைகள், அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆக எதிர்ப்பு, தமிழ் வழிபாட்டு உரிமை மறுப்பு, ஊர் சேரி பிரிப்பு, மாட்டுக்கறிக்குத் தடை, சமஸ்கிருதப் பெருமை, வேதங்களின் மந்திர சக்திகள் போன்றவை கலாச்சார மூலதனத்தின் முக்கியக் கூறுகள்.

**4) அர்த்தமுள்ள சமத்துவம் (Substantial Equality)**

சமத்துவத்துக்கான முன் நிபந்தனை சம உரிமை. சம உரிமைகளைப் பகிர்ந்து அளிக்காமல் சட்டத்தில் எழுதப்பட்டுள்ள சமத்துவம், உயிர் பெற்றுவிடாது. தேர்தலில் அனைவருக்கும் ஒரே ஓட்டு என்பது சமத்துவம் தான். ஆனால், ஒவ்வொரு ஓட்டையும் செலுத்துகிற குடிமகன் - குடிமகள் சம உரிமைக் குரியவராக இருக்கிறார்களா? என்றக் கேள்விக்கான விடை தான் அர்த்தமுள்ள சமத்துவம்.

இந்தக் கருத்தியல்களை மேலும் விரிவாக்கி திராவிட மாடலை செழுமைப்படுத்த வேண்டிய கடமை, திராவிட இயக்க ஆய்வாளர்கள், சிந்தனை யாளர்களுக்கு இருக்கிறது. ‘சமூகப் பிற்படுத்தப் பட்டத் தன்மை’ (Social Backwardness ) என்பதை நிர்ணயிப்பதற்குப் பிறந்த ஜாதி முதன்மையான அளவுகோல் என்றாலும், ஜாதியுடன் தொடர்புடைய 20 க்கும் மேற்பட்ட பொருளியல், வாழ்வாதார நடைமுறைகளைப் பொருத்தித் தான், மண்டல் ஆணையம் சமூகப் பிற்படுத்தப்பட்டத் தன்மையை ஆராய்ந்தது. அதேபோல், தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சமூகநீதிக்கான அளவுகோலாக தமிழ்வழிக் கல்வி, அரசுப் பள்ளி மாணவர்கள் என்ற இரண்டு காரணிகளையும் இணைத்திருக்கிறார். மொழி பண்பாட்டு அடையாளம் என்றாலும், பிற மாநிலத்தவர் தமிழர் வேலை வாய்ப்புகளை அபகரிப்பதை தடுக்கும் சமூக நீதிக் கருவியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

திராவிட மாடல் பேசும் சமூக நீதி, விளிம்பு நிலை மக்களை அதிகாரப்படுத்துதல், மாநில உரிமைகளை மீட்டெடுத்தல், சுயமரியாதை பண்பாட்டை வாழ்வியலாக்குதல், தமிழ்நாட்டை சுயசார்பு பொருளாதாரம் நோக்கி வளர்த்தெடுத்தல் என்ற நான்கு முக்கிய உள்ளடக்கங்களோடு தமிழ்நாடு முதலமைச்சர் முன்னெடுத்து வருகிறார். கட்சி அரசியலைக் கடந்த ‘திராவிட மாடல்’ என்ற தமிழ்நாட்டின் தனித்துவத்திற்கு நாம் வலிமை சேர்ப்போம். இது காலத்தின் தேவை. ●

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சிவகங்கை மண்டலத்தில் தொடர் பரப்புரை

## மாநில கல்வி உரிமைகளைப் பறித்து, மதவெறியைத் திணிக்கிறது, ஆரிய மாடல்






***மதுரை - சிவகங்கை :*** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் "நமக்கான அடையாளம் - திராவிட மாடல்" தெருமுனைக் கூட்டங்களின் நிறைவாக சிவகங்கையில் 13.05.2022 வெள்ளி மாலை 5.00 மணியளவில் சிவகங்கை சண்முக ராஜா கலையரங் கில் இராமச்சந்திரனார் நினைவரங்கத் தில் மண்டல மாநாடு நடை பெற்றது.

மண்டல மாநாட்டிற்கு நா.முத்துக் குமார் தலைமை தாங்கினார். தவச் செல்வன், ரமேஷ் முன்னிலை வகித்தனர். அறிவுமதி வரவேற்புரை யாற்றினார்.

மாநில அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, மாநிலப் பொரு ளாளர் திருப்பூர் துரைசாமி, மதுரை மாவட்டச் செயலாளர் மணியமுதன், மா.பா., மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டியன் ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவாக கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். மாவட்டச் செயலாளர் பெரியார் முத்து நன்றி கூறினார்.

முன்னதாக மாநில உரிமையை பறிக்காதே! கல்வி உரிமையை தடுக்காதே! மத வெறியை திணிக்காதே! எனும் முழக்கத்தோடு நமக்கான அடையாளம் திராவிட மாடல் தெருமுனைக் கூட்டங்கள் சிவகங்கை மதுரை மாவட்டங்களில் நடை பெற்றது.

***சிவகங்கை மாவட்டம் :*** சிவ கங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி யில் 04.05.2022 அன்று தொடங்கி 13.05.2022 வரை தெருமுனைக் கூட்டங்கள் நடை பெற்றன.

தெருமுனைக் கூட்டங்கள் நடை பெற்ற இடங்கள் : சிங்கம்புணரி - திருப்பத்தூர் ஒக்கூர் - மதகுபட்டி - பாகனேரி - கல்லல் மானகிரி - கோவிலூர் - காரைக்குடி புதிய பேருந்து நிலையம் - கழனிவாசல் வாட்டர் டேங்க் - ஆரிய பவன் - புதுவயல் ஸ்ரீராம் நகர் - கல்லு பட்டறை பனந்தோப்பு - பாப்பா ஊரணி - கீழ ஊரணி செஞ்சை - சத்ரியன் தியேட்டர் தேவகோட்டை தியாகிகள் பூங்கா - ஒத்தக்கடை - சருகணி - திருவேகம்பத்தூர் - சாலை கிராமம் இளையாங்குடி - மறவ மங்கலம் - புலியடி தம்மம் - வேலாயுத பட்டினம் - வெற்றியூர் காளையார் கோவில் பூவந்தி ஆகிய இடங்களில் நடைபெற்றன.

தோழர்கள் பெரியார் முத்து, நா.முத்துக் குமார் ஆகியோர் அனைத்து நாட்களிலும் பரப்புரையில் ஈடுபட்டனர். தோழர்கள் புதுக்கோட்டை இளங்கோ, பவானி வேணுகோபால் ஆகியோர் பரப்புரையில் கலந்து கொண்டனர்.

மானகிரி சிபிஎம் - வேணுகோபால், சிபிஐ - பழனி ராமச்சந்திரன், பனந் தோப்பில் வழக்கறிஞர் மனோஜ் (தலித் இஸ்லாமியர் கூட்டமைப்பு) ஆகியோர் உரையாற்றினர்.

***மதுரை மாவட்டம் :*** மதுரை மாவட்ட திவிக சார்பில் முதற் கட்டமாக மதுரை மாநகரில் 3 நாட்களில் 12 பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது..

மே 3 ஆம் தேதி காலை சிம்மக்கல் கலைஞர் சிலைக்கு மாலையணிவித்து கொள்கை முழக்கங்களோடு பரப்புரை தொடங்கியது. சிம்மக்கல் திமுக வட்ட செயலாளர் கழக தோழர்களை வாழ்த்தி நினைவு பரிசுகளை வழங்கினார்.

நண்பகல் 12 மணிக்கு ஆறுமுக்கு சந்திப்பில் நடைபெற்ற தெருமுனைக் கூட்டத்தை அதிமுக பொது செயலாளர் பசும்பொன். பாண்டியன் தொடங்கி வைத்தார்.

பெத்தானியபுரம், செல்லூர், மீனாட்சிபுரம், புதூர் பேருந்து நிலை யம் - அண்ணா பேருந்து நிலையம் - அம்பிகா தியேட்டர் - அண்ணா நேதாஜி சிலை (மீனாட்சி அம்மன் கோவில் சந்திப்பு) - டி.எம்.கோர்ட்- திருப்பரங்குன்றம் - அவனியாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளர்களாக, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில துணைப் பொது செயலாளர்-வெ.கனியமுதன், தமிழ்புலிகள் கட்சியின் மாநில செய்தி தொடர் பாளர் முத்துக்குமார், ஆதித்தமிழர் பேரவை கலை இலக்கிய மாநில செயலாளர் இரா. செல்வம், தமிழ் தமிழர் இயக்கம் மாநில பொறுப்பாளர் பரிதி, தபெதிக மாநில செயற்குழு உறுப்பினர் தமிழ் பித்தன், மாவட்ட பொறுப்பாளர்கள் விடுதலை சேகர் - மாயாண்டி, ஆதித் தமிழர் கட்சி மாநில நிதி செயலாளர் விடுதலை வீரன், வண்ணார் பேரவை மாநில தலைவர் மணி பாபா, தமிழ்தேச குடியரசு இயக்கம் மெய்யப்பன், புரட்சிகர இளைஞர் முன்னணி மாநில பொறுப்பாளர் குமரன், திமுக தலைமை கழகப் பேச்சாளர் ஜீவா, திருப்பரங்குன்றம் மதிமுக நகர செயலாளர் முருகேசன், மதுரை 53 ஆவது வட்ட மாமன்ற உறுப்பினர் நூர்ஜஹான்.

தமிழ்நாடு மாணவர் கழக தோழர்கள் திருப்பூர் சந்தோஷ், சபரி , சந்தோஷ் உள்ளிட்ட தோழர்கள் தெருமுனைக் கூட்டங்களில் சிறப்புரையாற்றினர்.

மாவட்ட செயலாளர். மா.பா.மணி அமுதன் தலைமையில் நடைபெற்ற இந்த பரப்புரையில் மாவட்ட தலைவர் காமாட்சி பாண்டி, மேலூர் பொறுப் பாளர் சத்யமூர்த்தி, மாளவிகா, பிரபாகர் , திலீபன் செந்தில் , தோழர் வாசுகி ஆகியோர் பங்கெடுத்தனர்.

**செய்தி : பரிமளராசன்**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

குறித்தப் பாடல்களை மேட்டூர் டி.கே. ஆர் இசைக் குழு வினர் பாடினர். இதில் கழகத் தோழர்கள் மேட்டூர் கோவிந்த ராஜ், கோவை கிருஷ்ணன், புரட்சித் தமிழன், பொள்ளாச்சி வினோதினி ஆகியோர் பாடல்களை பாடினர்.

பின்பு திராவிட மாடல் மண்டல மாநாடு துவங்கியது. மாநாட்டிற்கு கோவை மாநகர கழகச் செயலாளர் நிர்மல்குமார் தலைமை தாங்கினார். மாநாட்டு நிகழ்வுகளை கோவை மாவட்டக் கழகச் செயலாளர் யாழ். வெள்ளிங்கிரி ஒருங்கிணைத்தார். மாநகர துணைத் தலைவர் வெங்கட் வரவேற் புரையாற்றினார்.

கழக மாநில பொருளாளர் துரைசாமி, தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் ஆசிரியர் சிவகாமி, திவிக கோவை மாவட்ட தலைவர் இராமச்சந்திரன், திருப்பூர் மாவட்ட தலைவர் முகில்ராசு, தமிழ்நாடு மாணவர் கழக கோவை மாவட்ட பொறுப்பாளர் விஷ்ணு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

***சிவசேனாபதி - ராஜீவ் காந்தி பங்கேற்பு:*** மாநாட்டில் சிறப்பு அழைப் பாளர்களாக கோவை மாநகராட்சி மத்திய மண்டலக்குழு தலைவர் மீனா லோகு (திமுக), திமுக வட்டச் செயலாளர் பசுபதி, திமுக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, திமுக தலைமைக் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் இராஜிவ் காந்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

சிறப்பு அழைப்பாளர்களுக்கு "நமக்கான அடையாளம் - திராவிட மாடல்" எனும் முழக்கத்தோடு தமிழ்நாடு முழுவதும் நடந்த தெருமுனை கூட்டங் களுக்காக கழகத்தின் சார்பில் சமீபத்தில் வெளியிடப்பட்ட புத்தகங்களை திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, சிவகாமி, கோவை மாதவன் சங்கர், சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் வழங்கினர்.

நிறைவாக மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி திராவிட மாடல் ஆட்சி குறித்தும் திராவிட இயக்கத்தின் சாதனைகள் குறித்தும் நிறைவுரையாற்றினார். இறுதியாக கோவை அமிலா நன்றியுரை கூறினார்.

முன்னதாக கோவை மேட்டுப் பாளையம் திருப்பூர் உடுமலைப்பேட்டை பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் கழகத் தின் சார்பில் நமக்கான அடையாளம் திராவிட மாடல் எனும் முழக்கத்தோடு தெருமுனைக் கூட்டங்கள் பரவலாக நடத்தப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்களிடம் திராவிட மாடல் ஆட்சி குறித்தும் திராவிட இயக்க சாதனைகள் குறித்தும் கழகத் தோழர்கள் கடும் வெயி லிலும் பரப்புரைகளில் ஈடுபட்டனர். விடிய விடிய சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள் என நள்ளிரவு நேரங் களிலும் கழகத் தோழர்கள் இம் மாநாட் டிற்காக கடுமையாக பணியாற்றினர். மேலும் பரப்புரையின் போது, கழகத்தின் சமீபத்திய வெளியீடான புத்தகங்களை மக்களிடம் விற்பனை செய்தார்கள். கழகத்தின் பரப்புரைக்கு மக்களிடையே நல்ல ஆதரவு இருந்தது.பொதுமக்கள் சில இடங்களில் தாமாகவே முன்வந்து தங்களால் இயன்ற நிதி உதவியை அளித்தார்கள். தெருமுனைக் கூட்டங்கள் மற்றும் மாநாடும் கோவை திருப்பூர் பொள்ளாச்சி தோழர்களின் கடுமையான உழைப்பால் மிக சிறப்பாக நிறைவுற்றது.

***காவல்துறையின் இழுத்தடிப்பு :*** இந்த மாநாடு நடத்துவதற்கு காவல் துறையின் அனுமதி வேண்டி கழகத் தோழர்கள் காவல்துறையை அணுகிய பொழுது அனுமதிக்காக தொடர்ந்து அலைக்கழிப்பு செய்தும், ஒவ்வொரு இடங்களையும் அனுமதி மறுத்து மாற்றி மாற்றி நான்காவதாக டாடாபாத் இடத்தை காவல்துறை அளித்தது. தொடர் காவல்துறையினரின் அலைக் கழிப்பு, அனுமதி மறுப்பு, மேலும் மழை வரக்கூடிய ஒரு இடர்பாடான சூழல் ஆகியவற்றிலும் தோழர்கள் துவண்டு விடாமல் இம்மாநாட்டை ஏராளமான பொதுமக்கள் பார்வையோடு வெற்றி கரமாக நடத்தியுள்ளனர். மாநாட்டு நிகழ்வுகளை புகைப்படங்கள் காணொளி களாக பதிவு செய்த தோழர்கள், சிவராஜ்,ஸ்டாலின் ராஜா, ஆனைமலை கணேஷ்,கிருஷ்ணன், முத்து,திருப்பூர் தனகோபால்.

***பரப்புரையில் பங்கேற்றத் தோழர் கள்:*** நடைபெற்ற 28 தெருமுனைக் கூட்டங்களிலும் கழகப் பொருளாளர் துரைசாமி, தமிழ்நாடு மாணவர் கழகம் மகிழவன், அய்யப்பன் ஆகியோர் பங்கேற்றனர்.

**கோவை மாநகரம்** - நிர்மல் குமார், வெங்கட், கிருஷ்ணன், புரட்சித் தமிழன், அமிலா, நேருதாஸ், சிவராஜ், தங்கராஜ், மாதவன் சங்கர், முனியப்பன், ராஜாமணி, ஜெயந்த், சக்கரவர்த்தி. **சூலூர் ஒன்றியம்** - பன்னீர்செல்வம், தமிழ்செல்வி, பாபு, நாகலட்சுமி, முனியப்பன். **பொள்ளாச்சி** - வெள்ளிங்கிரி, அரிதாசு, அப்பாதுரை, சபரி, மணி, வினோதினி, சிவா, நடராஜ், சந்தோஷ், பாலா, கணேஷ், பகத்சிங், கதிர், அனுசுயா, முருகேசு, விவேக், ஆனந்த், **மேட்டுப்பாளையம்** - பா.இராம சந்திரன், அமுல்ராஜ். **அன்னூர் ஒன்றி யம்** - விஷ்ணு,மோகன், பார்த்திபன், நந்தகுமார், மனோ.

திருப்பூர் பரப்புரை மற்றும் மாநாட்டில் கலந்துகொண்ட தோழர்கள்: சு.துரைசாமி,பொருளாளர் - வீ.சிவகாமி தலைவர், தமிழ்நாடு அறிவியல் மன்றம் - முகில் இராசு,மாவட்டத் தலைவர் - நீதி ராசன், மாவட்டச் செயலாளர் - சங்கீதா, மாவட்ட அமைப்பாளர் - இராமசாமி, தெற்குப் பகுதி பொறுப்பாளர் - தனபால், மாநகரத் தலைவர் - மாதவன், மாநகரச் செயலாளர் - முத்து, மாநகர அமைப் பாளர் - அய்யப்பன், இராஜசிங்கம், மாரிமுத்து, அகிலன், மோகன், மதன், பரந்தாமன், நாகராசு, இரவி, விஜய், சுசீலா, பார்வதி, சரசு, முத்துலட்சுமி, வசந்தி, சாரதி, திலகவதி, சிரிசா, வீர லட்சுமி, கோமதி, கார்த்திகா.

***பல்லடம்*** - பருதி இளம் வழுதி, நகர தலைவர், பல்லடம் - கோவிந்தராசு,நகரச் செயலாளர், பல்லடம் - சண்முகம், ஒன்றியச் செயலாளர், பல்லடம் - வீரகுமார், சரஸ்வதி

***உடுமலை*** - இயல்,அமைப்பாளர், உடுமலை - கணக்கன் ஒன்றியத் தலைவர், மடத்துக்குளம் - சிவானந்தம் ஒன்றியச் செயலாளர், பாண்டியநாதன் மடத்து குளம் - கலைவாணி, மடத்துக்குளம். மாணவர் கழகத் தோழர்கள்: மகிழவன், பிரசாத், இலக்கியா, பிரபாகரன், புகழேந்தி, ஆகாஷ். பெரியார் பிஞ்சுகள் லவ்லி, அமுதினி, இளமதி, வெற்றிமாறன், மெல்வின், அஸ்வின், ஈழமாறன், யாழிசை, யாழினி.

**செய்தி : பரிமளராசன்**
**(கழக சமூக ஊடக பொறுப்பாளர்)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th May 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN